**வடமேல் மாகாண சபைய - 2015**

-----------------------------------------------------

வடமேல் மாகாண சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது. இதில் அடங்கிய கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பான விரிவான அறிக்கை மாகாண சபையில் முன்வைக்கப்படுவதன் பொருட்டு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையினை நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810)இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில்உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வட மேல் மாகாண சபையின் நிதிசார் நிலைமை மற்றும்அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகளும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் கோட்பாடுகளுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தோற்றுவிக்கின்றனஎன்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருமானக் கணக்கு**

மாகாண நிதி விதிகளுக்கமைய, வருமானம் தொடர்பான நியதிச் சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கணக்களி உத்தியோகத்தர்களால் தமக்குரிய வருமானக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனினும், மீளாய்வாண்டிற்கான மாகாண சபையினது வருமானக் குறியேடுகளுக்குரிய 23 கணக்குகள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு உள்ளடங்கலான ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டின் பொருட்டு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறுகணக்குகளைச் சமர்ப்பிக்கும் முன்னேற்றம் கீழே காணப்படுகின்றது.

| | கணக்கின் பெயர் | 2015 ஆம் ஆண்டிற்கானது | | | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான சமர்ப்பிக்கப்படாத கணக்குகளது எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளது எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளது எண்ணிக்கை | |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 28 | 28 | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 78 | 64 | 14 | 04 |
| (iii) | மாகாண சபை உறுப்பினர்களுக்கான கடன்வசதி முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 08 | 05 | 03 | 01 |
| (v) | நிதிய மற்றும் சட்டவாக்கக் கணக்குகள் | 14 | 12 | 02 | - |
| (vi) | வருமானக் கணக்கு | 23 | 23 | - | - |
| | மொத்தம் | 152 | 133 | 19 | 05 |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்ளைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கணக்குகள் பணிப்பாளர் நாயக்கத்தின் SS/AS/AA ஆம் இலக்க 2013 சனவரி 24 ஆம் திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்த கணக்குகள் அட்டுறு அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், வடமேல் மாகாண சபை அந்த சுற்றிக்கையை பின்பற்றியிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதற்காக பின்பற்றும் அடிப்படை தொடர்பில் கணக்கீட்டு கொள்கையூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மாகாண சபை ஆரம்பம் முதல் இது வரை பல்வேறு மூலதன ஒதுக்கங்களுடாக நிலையான சொத்துக்களுக்காக கருத்திற் கொள்ள வேண்டிய செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும் அவை கணக்கு வைக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது மூலதன செலவினமாக ரூபா 2,710,564,365 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான கடனாக இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்ட ரூபா 148,616,768 மீதியானது வணிக முற்பணக் கணக்குகளிலிருந்து பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை ஒன்றுக்கொன்று ஈடுசெய்ததன் பின்னர் பெறப்பட்ட மீதியென அவதானிக்கப்பட்டது. அதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை என்பதும், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு ஏற்புடைய விதத்திலமையாத செயற்பாடொன்று என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வடமேல் மாகாண சபைக்குரிய தலைமைச் செயலாளர் அலுவலகம், சபை செயலாளர் அலுவலகம், வடமேல் மாகாண ஆளுநரின் அலுவலகம், 03 அமைச்சுக்கள் மற்றும் 13 திணைக்களங்களில் ரூபா 92,530,521 கூட்டுத்தொகையான பொறுப்புக்களும், தலைமைச் செயலாளர் அலுவலகம் உள்ளடங்கலாக 10 திணைக்களங்களின் ரூபா 211,304,618 கூட்டுத்தொகையான ஏற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தமையும் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் புடவைக் கைத்தொழில் திணைக்களம் ஆகியவற்றின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான பொது வைப்புக் கணக்குகளுக்குரிய திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் மாகாண திறைசேரி குறிப்புக்கள் ஆகியவற்றை ஒப்பிடும் போது ரூபா 8,747,647 கூட்டுத்தொகையான வேறுபாடொன்றும், புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கொடுப்பனவுகளில் ரூபா 2,834,600 தொகையான வேறுபாடொன்றும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்நாட்டு சுகாதார மருத்துவ அமைச்சு, அரச சேவைகள் ஆணைக்குழு, ஆணைக்குழு, சபைச் செயலாளர் மற்றும் 3 திணைக்களங்களின் மீளாய்வாண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ள முற்பண ''பீ'' கணக்குகளது தனித்தனி மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பு மற்றும் திணைக்களங்களின் கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஆகியவற்றிடையே ரூபா 5,962,250 தொகையான வேறுபாடொன்று நிலவியது.

(இ) விவசாய, கடல்வாழ் உயிரின உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசன மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சு, சபைச் செயலாளர் அலுவலகம், கனேவத்த பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் 04 திணைக்களங்களின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'பீ' கணக்கின் திணைக்கள புத்தகம் மற்றும் திறைசேரி புத்தகங்களிடையே ரூபா 12,552,711 வேறுபாடொன்று நிலவியது.

(ஈ) விவசாயத் திணைக்களத்தில் 2012 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச்சென்ற இரு உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 173,800 மீதியானது கடன்பட்டோர் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 449,942 என காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்களின் கீழ் பிரதான அமைச்சின் விஸ்கம் இல்லத்தினை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 7,038,211 தொகையான கடன் பணம் பல ஆண்டுகளாக அறவீடின்றி இல்லாது தொடர்ந்து முன்கொண்டுவரப்படுகின்றமையால் இந்த மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண திறைசேரி வைப்புக் கணக்கில் இழப்புக்கள் மற்றும் நட்டங்களாக ரூபா 13,609,655 தொகை கிரிஉல்ல வலயக்கல்வி அலுவலகத்தில் 2010/2011 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நிதி மோசடி காரணமாக நட்டமொன்றினைத் தீர்ப்பதற்காக மாகாண திறைசேரியிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததெனினும், பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் அந்த செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 1972 இன் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க அதிகாரச்சட்டத்தின் 43(i) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் கூட்டுறவு சங்க விதி 43(ii) இன் பிரகாரம் அனைத்து பதிவுசெய்யப்பட்ட சங்கங்களும் பதிவாளரால் நிர்ணயிக்கப்படும் போது அவரால் நிர்ணயிக்கப்படும் விதத்தில் சங்கத்தின் வருடாந்த தேறிய இலாபத்தில் 10 சதவீதத்தை மிகைக்காத மற்றும் ரூபா 5 இற்கு குறையாத தொகையொன்று கூட்டுறவு சங்கங்கள் நிதியத்திற்கு பங்களிப்புப் பணமாக வருடந்தோறும் செலுத்த வேண்டியிருந்தது. இருந்த போதிலும் சிலாபம் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குரிய 257 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு தடவையேனும் பணம் செலுத்தியிராததுடன், அந்த சங்கங்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 2,356,483 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

(i) வைப்புக் கணக்கின் பிரகாரம் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு 1993 ஆம் ஆண்டு முதல் ரூபா 426,124 தொகையான பணம் செலுத்த வேண்டியிருந்ததெனினும், மீளாய்வாண்டின் போதும் அந்த பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கையேற்கப்பட்ட கடன் மீதிகளாக பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் விவசாயத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,081,161 தொகை மீளாய்வாண்டிலும் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மாகாண சுகாதார அமைச்சில் திறமைகளை வெளிப்படுத்திய வீரர்/வீராங்கனைகளை ஊக்குவிப்பதற்காக 2012/2013 மற்றும் 2013/2014 பாராட்டு விழாக்களின் போது பாராட்டு பெற்ற 134 வீர வீராங்கனைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 510,250 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் உரிய அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததெனினும், 2015 ஆம் ஆண்டிலும் அந்த தொகை செலுத்தி முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 02 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களில் இடமாற்றம் பெற்று வந்திருக்க உத்தியோகத்தர்களின் தீர்ப்பனவு செய்ய வேண்டிய கடன் மீதிகளின் ரூபா 78,472,568 கூட்டுத்தொகையினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

---

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தலைமைச் செயலாளர் அலுவலகம், வென்னப்புவ பிரதேச பொறியியலாளர் அலுவலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்கள் என்பவற்றிலிருந்து 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட ரூபா 3,690,075 பெறுமதியான வைப்புகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஈ) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்**

---

மூன்று மாகாண அமைச்சுக்கள், 11 திணைக்களங்கள், 11 பிரதேச செயலகங்கள், தலைமைச் செயலாளர் அலுவலகம், சபைச் செயலாளர் மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு என்பவற்றில் இடமாற்றம் பெற்ற, மரணமடைந்த, சேவையை

விட்டுச்சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, ஓய்வு பெற்ற அல்லது பிற காரணங்களால் தீர்த்து வைக்கப்படாதிருந்த கடன் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 75,523,287 ஆகும்.

**2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண ஆயர்வேத திணைக்களத்திற்குரிய குருணாகல் ஆயர்வேத மருத்துவமனை மற்றும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய அளவ்வ பிரதேச வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் எரிபொருள் பாவனை தொடர்பில் முறையான பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிராமையால் அவ்வப்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 270 லீற்றர் எரிபொருள் செலவிடப்பட்ட விதம் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) ஹொரம்புவ ஆயர்வேத மத்திய மருந்தகத்தின் மருந்து பொருள் இருப்புப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிராமை மற்றும் இருப்பு புத்தகங்கள் பென்சிலால் அடையாளமிடப்பட்டிருந்தமை ஆகியன அவதானிக்கப்பட்டன. 2015 சனவரி முதல் செப்தம்பர் மாதம் வரை உற்பத்தி செய்யப்பட்ட 760 திரிபலா க்வான போத்தல்கள் மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், மருந்தக இருப்புப் புத்தகத்தில் அந்த பெறுவனவு பதிவு செய்யப்பட்டிராத காரணத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள் உண்மையாக நோயாளர்களுக்கு வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதுள்ளது.

(இ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய 07 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 69,947,371 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பதிவேடுகள், பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அந்த மீதிகளை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) புடவைக் கைத்தொழில் திணைக்களம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் அசையாத சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த முறையே ரூபா 15,013,112 மற்றும் ரூபா 5,177,851 தொகையான முற்பணக் கணக்கு மீதிகள் தொடர்பான பட்டோலைகள் / நிலையான சொத்துப் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த மீதிகளை பரிசோதனை செய்ய முடியாது போயிருந்தது.

**2.2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வு தேரிவுப் பரிசேதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) வடமேல் மாகாண சபையின் 1990 இன் 08 ஆம் இலக்க நிதி விஞ்ஞாபனத்தின் | |
| vi ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு | மாகாண வருமானத் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட ரூபா 243,392,455 தொகையான நிலுவை புரள்வு வரித் தொகையில் நடப்பாண்டின் இறுதியளவில் ரூபா 38,522,959 |

அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய தொகையில் ரூபா 32,366,302 தொகை விடுவிக்கப்பட்டதன் பின்னர் ஆண்டின் இறுதியில் ரூபா 172,503,144 தொகையான நிலுவை வரி அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) வடமேல் மாகாண நிதி விதிக்கோவை

---------------------------------------------------------------

(i) மா.நி.வி 54.5

(ஏ) குருநாகல் ஆயர்வேத மருத்துவமனை வளாகத்தில் விரிவுரை மண்டபத்தில் அருகிலுள்ள ‘‘வெண்சந்தன’’ மரம் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி இரவில் யாரோ ஒருவரால் வெட்டப்பட்டமை தொடர்பில் பூர்வாங்க அறிக்கையொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(பீ) 2014 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகிய புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 253 – 6639 ஆம் இலக்க கெப் வண்டியின் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பில் மாகாண நிதிசார் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 11 வாகனங்கள் 2015 ஆம் ஆண்டினுள் அவசர விபத்துக்களுக்குட்பட்டிருந்ததெனினும், இது தொடர்பில் பூர்வாங்க அறிக்கையொன்றோ அல்லது முழுமையான அறிக்கையோ தயாரிக்கப்பட்டு பழுதுபார்த்தல் செலவினம் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டில் அல்லது கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(சீ) மாகாண விவசாய அமைச்சின் கே.எஸ் 8730 ஆம் இலக்க வாகனம் விபத்துக்குட்பட்டிருந்ததுடன், நட்டம் ஏற்பட்டு 03 மாதங்களின் முன்னர் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 148,298 தொகையான நட்டத்தினை அறவிட முடியாது போயிருந்தது.

(டீ) மாகாண விவசாய அமைச்சின் PE – 4121 ஆம் இலக்க வாகனத்தின் விபத்து தொடர்பில் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், வாகனத்தின் பழுதுபார்த்தல் செலவின மதிப்பீடு ரூபா 4,500,000 ஆக இருந்த போதிலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ரூபா 3,960,000 தொகையான காப்பீட்டு இழப்பீட்டின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததெனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய வாகனம் பழுதுபார்த்தல் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ii) மா.நி.வி 54.6

குருநாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 43-0672 ஆம் இலக்கமுடைய தீயணைப்பு வாகனம் மற்றும் LW – 0425 இலக்கமுடைய தீயணைப்பு வாகனம் ஆகியன

| | | |
|---|---|---|
| | | விபத்துக்குள்ளாகி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முறையே 11 மாதங்கள் மற்றும் 09 மாதங்கள் கடந்திருந்த போதிலும் விபத்து தொடர்பில் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மா.நி.வி 59 | மாகாண ஆயர்வேத திணைக்களத்தால் உரிய முறையில் புத்தகத்திலிருந்து நீக்குவதற்கான கட்டளையொன்றினைப் பெற்றுக்கொள்ளாமல் 04 மருந்துப் பொருட்களில் 3 கிலோ கிராம் மற்றும் 150 கிராம்கள் அளவானது காலாவதியானமையால் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | மா.நி.வி 60 | நிறுவனத்தினால் இழப்புகள் மற்றும் நட்டங்களுக்காக பதிவேடொன்று பேணப்பட வேண்டுமெனினும், பல வருடங்களாக அவ்வாறானதொரு பதிவேடு பேணப்படாதிருந்ததுடன், 2014 ஏப்ரல் 01 திகதி KB -0889 இலக்கமுடைய வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்தினால் மாகாண வருமானத் திணைக்களத்திற்கு ரூபா 330,398 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததெனினும், இது தொடர்பான விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | மா.நி.வி 261.2.2 | (அ) நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பெற்றுக் கொள்ளப்படும் முற்பணங்கள் உரிய நடவடிக்கை நிறைவடைந்தவுடன், உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமெனினும், கிரிஉல்ல மற்றும் இப்பாகமுவ வலயங்களில் முறையே 07 மற்றும் 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 69,400 தொகை மற்றும் ரூபா 443,590 தொகை பெறுமதியுடைய முற்பணங்களை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், இப்பாகமுவ வலயத்தில் 06 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 626,340 பெறுமதியான முற்பணம் 25 - 104 நாட்களுக்கிடைப்பட்ட காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.<br><br>(ஆ) குளியாப்பிட்டிய வலயக்கல்வி அலுவலகத்தில் 20 சந்தர்ப்பங்களில் 11 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 321,000 முற்பணத் தொகையில் 48 சதவீதமான ரூபா 154,600 தொகையான பணம் உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படாது காசாகத் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (vi) | மா.நி.வி 372 | புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நடப்பாண்டிற்கான கணக்குகள் அடுத்துவரும் வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுமெனினும், 2013 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் 2015 மார்ச் 11 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (vii) | மா.நி.வி 379 | புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு நட்டங்களை தீர்ப்பதற்காக வருடாந்த நிதிக்கூற்றுக்களில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | மா.நி.வி 474 | அரசின் அனைத்து நிறுவனங்களிலுமுள்ள பொருட்களின் சரி பிழை பார்ப்பதற்காக ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டுமெனினும், 2015 பெப்ரவரி 09 ஆந் திகதி மதிப்பாய்வுக்குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்காக 22 பாடசாலைகளும் 2014 ஆம் ஆண்டிற்காக 38 பாடசாலைகள் மற்றும் 02 வலய அலுவலகங்களினதும் மெய்மையாய்வு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மெய்மையாய்வு நிறைவடைந்த 80 பாடசாலைகளிலும் 21 பாடசாலைகளின் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | மா.நி.வி 476 | எந்தவொரு ஆண்டினதும் திசெம்பர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றில் பொருள் மெய்மையாய்வு சபையொன்றினை நியமித்து திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருட்களின் சரி பிழை பார்வையிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் மாகாண வருமானத் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(இ) சுற்றறிக்கைகள்**

(i) கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (ஏ) | 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய FD/1/27/1/5/1/2007 ஆம் இலக்க மற்றும் 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3:2 ஆம் பிரதி | மிகவும் வசதியுள்ள பாடசாலை வகைக்குரிய பாடசாலையொன்றின் ஆகக்கூடிய சேவைக்காலம் 06 வருடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், 08 வலயங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 166 பாடசாலைகளில் 2565 ஆசிரியர்கள் 06 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பாடசாலையின் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. |
| (பீ) | 2008 செம்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றிக்கை | தரம் 1 முதல் 5 வரை வகுப்பறையொன்றின் ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும், தரம் 6 முதல் 11 வரை வகுப்பறையொன்றின் ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 இனை விஞ்சக்கூடாதெனவும் குறிப்பிடப்பட்டுள்ள போது புனித மரியாள் மாதிரி மஹா வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டின் போது அந்த எல்லையினை மிகைத்து 181 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |

(சீ) 2013 மே 23 ஆந் திகதிய 23/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை

வகுப்பறையொன்றிற்கு அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆக இருந்த போதிலும், 27 பாடசாலைகளில் 2015 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் அந்த எல்லையினுள் உரிய வகுப்பறைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய மாணவர்களில் 348 பேர் காத்திருப்புப் பதிவேட்டின் பிரகாரம் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ii) திறைசேரிச் சுற்றறிக்கை**

(ஏ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றிக்கை

கு/பொத்துபோவ மஹா வித்தியாலயத்தினதும் மாகாண வருமான திணைக்களத்தினதும் கணனிகள் தொடர்பில் சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(பீ) 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் பாதீட்டு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி

2015 ஆம் ஆண்டிற்கான வாழ்த்து மடல்கள் மற்றும் சிங்கள பஞ்சாங்கம் ஆகியவற்றினை அச்சிடல், நாளாந்த பத்திரிக்கைகளை கொள்வனவு செய்தல் மற்றும் பிரதம அமைச்சரின் புகைப்படத்தினை அச்சிடல் போன்ற சுற்றிக்கைக்கு முரணான செயற்பாடுகளுக்காக ரூபா 653,754 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(iii) சனாதிபதி செயலாளரின் சுற்றிக்கை**

(ஏ) 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றிக்கை

வடமேல் மாகாண பிரதம அமைச்சின் எரிபொருள் படி செலுத்தும் உத்தியோகத்தரொருவரின் வாகனத்திற்காக 08 கட்டளைகள் மூலம் ரூபா 65,960 பெறுமதியான 600 லீட்டர் எரிபொருள் அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(பீ) 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றிக்கை, 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 23/2007 ஆம் இலக்க மற்றும் 2010 மே 24 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை, 2015 யூன் 04 ஆந் திகதிய என்டபிள்யூபீ/சீஎஸ்/ஏடீ/2/ 22 ஆம் இலக்க சனாதிபதி செயலாளருக்கு முகவரியிடப்பட்ட வடமேல் மாகாண தலைமைச் செயலாளரின் கடிதம்

(i) மான்புமிகு மாகாண அமைச்சர்கள் உள்ளடங்கலாக பதிவியிலுள்ளோர் மற்றும் அவர்களின் பிரத்தியேக பதவியணிக்கு செலுத்தக்கூடிய கூட்டிணைந்த படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் தொடர்பில் விளக்கமளித்தலொன்று இடம்பெற்றிராதபோது வடமேல் மாகாணத்தின் பிரதம அமைச்சின் அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களுக்காக 2015 ஆம் ஆண்டினுள் கூட்டிணைந்த படிகளாக ரூபா 274,721 மற்றும் மேலதிக நேரப்படிகளாக ரூபா 750,642 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பிரதம அமைச்சரின் தனிப்பட்ட பதவியணிக்குரித்தல்லாத 08 உத்தியோகத்தர்களுக்காக கூட்டிணைந்த படிகளாக ரூபா 34,845 தொகையும் மேலதிக நேரப் படிகளாக ரூபா 132,066 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (iv) | அரச நிதிச் சுற்றறிக்கை<br>------------------------------------------ | |
| | 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 (1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வடமேல் மாகாண சபையின் வருடாந்த செயலாற்றல் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறானதொரு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிரு க்கவில்லை. |
| (v) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை<br>----------------------------------------------------- | |
| | (ஏ) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ.01/2010/ 01 ஆம் இலக்க சுற்றிக்கை | வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டிருந்த 36 மாகாண சபை உறுப்பினர்களுக்கான கூட்டிணைந்த படிகள் மற்றும் அமைய கொடுப்பனவுகளாக சபைச் செயலாளர் அலுவலகத்தால் ரூபா 1,757,114 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| | (பீ) 2014 செப்தம்பர் 30 ஆந் திகதிய பீஎவ்டீ/ஆர்ஈடீ/01/ 04/2013/05 ஆம் இலக்க சுற்றிக்கை | சுற்றறிக்கையின் (vi) ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தரொருவர் மாதமொன்றிற்கு மேற்பட்ட காலமாக சம்பளத்துடன் கூடிய அல்லது சம்பளமற்ற விடுமுறையை பெற்றிருப்பின் வதிவிடம் மற்றும் கைத்தொலைபேசி போன்றவற்றுக்கான படிகள் செலுத்தப்படக்கூடாதெனினும், ஆயுர்வேத திணைக்களத்தின் குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினதும், கல்கமுவ வைத்தியசாலையின் பிரசவ விடுமுறை மற்றும் வெளிநாடு செல்வதற்கான விடுமுறைகளைப் பெற்றிருந்த 32 உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 494,625 தொகைப் பணம் விடுமுறைக் காலத்தினுள் தொலைப்பேசி படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |

(vi) ஏனைய சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| 2015 பெப்ரவரி 16 ஆந் திகதிய 02-88/2014(i) ஆம் இலக்க சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சின் பொது சுற்றிக்கையின் 03 மற்றும் 05 ஆம் பந்திகள் | அளவ்வ பிரதேச மருத்துவமனையின் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் இருவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு முரணாக 2014 யூன் 02 ஆந் திகதி முதல் வருகை மற்றும் வெளிச் செல்லல்களை தனியானதொரு கையொப்ப பதிவேட்டில் பதிவு செய்திருந்ததுடன், தம்பதெனிய ஆதார வைத்தியசாலையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட பெண் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 961,977 மேலதிக நேரப்படியாக செலுத்தப்பட்டிருந்தது. |

(ஈ) **தாபன விதிக்கோவை**

| | |
|---|---|
| தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவு | குருநாகலை மாநகர சபையின் பிரதி நகர ஆணையாளர் 2014 செப்தம்பர் 05 ஆந் திகதி கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் பதவியில் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்டமைக்காக மற்றும் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்வலு, வீடமைப்பு மற்றும் நிர்மாண அலுவல்கள் அமைச்சின் செயலாளர், வடமேல் மாகாண தலைமை அமைச்சின் செயலாளர் பதவியில் பதிற்கடமைக்காக 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முதல் 2015 நவம்பர் மாதம் வரை நியமிக்கப்பட்டிருந்தமையால், அதற்குரிய அடிப்படை சம்பளத்தில் 25 சதவீதம் பதிற்கடமை படிகளாக 2015 செப்தம்பர் மாதம் வரை முறையே ரூபா 97,063 மற்றும் ரூபா 32,134 செலுத்த வேண்டுமெனினும், முறையே ரூபா 114,230 மற்றும் ரூபா 39,086 செலுத்தியமையால் கூடுதலாக ரூபா 24,119 செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.2.9 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் சிறு கைத்தொழில் பணிப்பாளருக்கு ரூபா 367,550 தொகை இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கல்வி அமைச்சின் அரச ஊழியர் முற்பணம் ''பீ'' கணக்கிற்காக ஒதுக்கீட்டு சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டிருந்த செலவினத்தின் ஆகக் கூடிய எல்லை ரூபா 11,220,787 இனால் விஞ்சியிருந்தது.

(இ) புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 60 வருடங்கள் பூர்த்தியடைந்து ஓய்வு பெற்றதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த இரு உத்தியோகத்தர்களின் சம்பளம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இரு உத்தியோகத்தர்களினதும் ஒப்பந்தங்கள் சேவைக்கு நியமிக்கும் கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக பொது நிர்வாக சுற்றிக்கை 06/2006 இன் பிரகாரம் சம்பளத் திருத்தம் செய்யப்பட்டு 2006 சனவரி முதல் 2014 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் ஓய்வூதியமாக ரூபா 1,829,055 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மேற்பார்வை அங்கத்தவர்களாக சேவையாற்றுவதற்காக எரிபொருள் படி செலுத்துவதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனினும், 2015 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை வடமேல் மாகாண சபையின் இரு அங்கத்தவர்களுக்கு மாகாண அமைச்சொன்றில் மேற்பார்வை உறுப்பினர்களாக சேவையாற்றுவதற்காக மாதமொன்றிற்கு ரூபா 10,000 வீதம் ரூபா 160,000 தொகை எரிபொருள் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதி தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 142 இன் பிரகாரம் தலைவருக்கு, ஆளுங்கட்சி அமைப்பாளர் மற்றும் எதிர்க்கட்சி அமைப்பாளர் ஆகியோருக்கு கூட்டிணைந்த படிகள், எரிபொருள் படி மற்றும் தொலைபேசி படி ஆகியவற்றை செலுத்துவதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாதுள்ள போது சபைச் செயலகத்தால் ரூபா 1,115,000 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மாகாண சபையின் ஒவ்வொரு வருமான குறியீட்டின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பிடப்பட்டுக் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான குறியீட்டு இலக்கம் | வருமான விபரம் | 2015 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2015 உள்ளபடியான வருமானம் | 2014 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2014 உள்ளபடியான வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10.02,10.03 | உற்பத்தி மற்றும் செலவினம் மீதான வரி | 5,413.00 | 5,658.70 | 5,153.00 | 5,036.40 |
| 20.02 | குத்தகை வாடகை, இலாபம், பங்கிலாபம் | 180.00 | 187.16 | 252.00 | 184.67 |
| 20.03 | விற்பனையும் கட்டணமும் | 459.94 | 536.64 | 623.00 | 486.78 |
| 20.06 | மூலதனப்பொருள் விற்பனை | 10.00 | 0.20 | 27.00 | 11.77 |
| | மொத்தம் | 6,062.94 | 6,382.7 | 6,055.00 | 5,719.62 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிதி விதி 41.1.4 ஆம் பிரிவின் பிரகாரம் தர்க்க நீதியானதும் சரியானதுமான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமையால் 11 செலவின விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானத்தினை விஞ்சாத உள்ளபடியான வருமானம் ரூபா 598,277 இலிருந்து ரூபா 366,222,570 வரை அல்லது 2.34 சதவீதம் முதல் 97.7 சதவீதம் இற்கு இடைப்பட்ட வீச்சினை கொண்டிருந்ததுடன், 08 வருமான விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சிய உள்ளபடியான வருமானம் ரூபா 1,705,769 முதல் ரூபா 501,740,558 வரை அல்லது 4.26 முதல் 275.19 சதவீதத்திற்கிடைப்பட்ட வீச்சினால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் கட்டணங்கள் மற்றும் பெறுவனவுகள், முதலீட்டு வட்டி மற்றும் ஏனைய வருமான தலைப்புக்களின் வருமானம் முறையே ரூபா 3,378,245, ரூபா 9,020,913 மற்றும் ரூபா 6,309,852 எனுமாறு குறைவடைந்திருந்தது.

(இ) வருடத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 831,085 தொகையான மோட்டார் வாகன தண்டப்பண நிலுவை வருமானங்களில் மீளாய்வாண்டில் ரூபா 60,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திர நிலுவை வருமானமான ரூபா 7,616,648 தொகையில் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருட ஆரம்பத்தில் நிலவிய ரூபா 76,554,598 தொகையான சொத்துக் கையளிப்பின் அடிப்படையில் முத்திரை வரி நிலுவை வருமானத்தில் ரூபா 23,253,600 தொகை ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தமையால், ரூபா 60,496,965 தொகை ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 1,400,467,030 ஆக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,909,677 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 4.2.1 வருமானமும் செலவினமும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருவாய் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பு கீழே காணப்படுகின்றது.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப்பட்ட | உள்ளவாறானது | முரண்கள் | பாதிடப்பட்ட | உள்ளவாறானது | முரண்கள் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 5,450.00 | 5,658.70 | (208.70) | 5,153.00 | 5,036.39 | 116.61 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரி அல்லாத வருமானம் | 725.00 | 724.03 | 0.97 | 902.00 | 683.22 | 218.78 |
| அரசாங்க மானியம் | 25,017.38 | 24,417.02 | 600.36 | 20,672.10 | 19,393.21 | 1,278.80 |
| மொத்தம் | 31,192.38 | 30,799.75 | 392.63 | 26,727.10 | 25,112.82 | 1,614.20 |
| **மீண்டுடெழும் செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 22,213.90 | 21,859.94 | 353.96 | 17,263.00 | 16,999.31 | 263.69 |
| ஏனைய செலவினம் | 5,486.51 | 4,828.78 | 657.73 | 4,856.50 | 4,199.26 | 657.24 |
| உப மொத்தம் | 27,700.41 | 26,688.72 | 1,011.69 | 22,119.50 | 21,198.57 | 920.93 |
| மூலதனச் செலவினம் | 3,401.92 | 2,710.56 | 691.36 | 4,067.70 | 3,869.33 | 198.37 |
| மொத்தம் | 31,102.33 | 29,399.28 | 1,703,05 | 26,187.20 | 25,067.90 | 1,119.30 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வரி மற்றும் வரியல்லா வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 5,668,697,124 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் அந்த வருமானம் ரூபா 5,036,392,435 ஆனமையால் மொத்த வருமானத்தில் ரூபா 632,304,689 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கு ஒப்பான மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் ரூபா 5,490,146,947 இனால் அதிகரித்திருந்தது.

(i) மீளாய்வாண்டின் சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களுக்கான செலவினம் ரூபா 21,859,949,787 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் செலவினம் ரூபா 16,999,315,509 ஆக இருந்தமையால் அந்த செலவினம் ரூபா 4,860,634,278 இனால் அல்லது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 1,809,621,789 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் செலவினம் ரூபா 1,688,881,659 ஆனமையால் ரூபா 120,740,130 இனால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) ஏனைய மீண்டெழும் செலவினங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 74,071,607 ஆக இருந்ததுடன், முன்னைய வருடத்தில் அது ரூபா 34,263,176 ஆனமையால், அந்த செலவினம் ரூபா 39,808,431 இனால் அல்லது 116 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) மாகாண சபை அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கீழ் 14 தலைப்புகளுக்குரிய 70 சந்தர்ப்பங்களில் மொத்த நிதியேற்பாட்டு பெறுமதி ரூபா 612,565,296 இல் ரூபா 468,613,584 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், 18 தலைப்புகளுக்குரிய 63 சந்தர்ப்பங்களில் ரூபா 113,935,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் வேறு செலவின விடயங்களுக்கும், 125 சந்தர்ப்பங்களில் ரூபா 524,930,000 மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 166,696,671 வேறு செலவின விடயங்களுக்கும் மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) 04 வருமானத் தலைப்புகளுக்குரிய 08 சந்தர்ப்பங்களில் குறைநிரப்பினூடாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 4,125,906 இல் ரூபா 2,159,913 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், 06 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட ரூபா 2,920,311,000 தொகையில் ரூபா 112,715,315 சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) பிரதம செயலகத்தின் ஒரு செலவின விடயத்திற்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 350,000,000 தொகை இருக்கும் போது குறைநிரப்பினூடாக ரூபா 150,000,000 பெற்றுக்கொள்ளப்பட்டு இரு சந்தர்ப்பங்களில் ரூபா 40,000,000 ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டினுள் மதிப்பீட்டு ஒதுக்கத்தினை விட குறைந்த தொகையான ரூபா 30,132,536 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) வடமேல் மாகாண பிரதான பிரதம செயலகம், சபைச் செயலகம், மாகாண ஆளுநர் அலுவலகம், 03 அமைச்சுக்கள் மற்றும் 08 திணைக்களங்கள் என்பனவற்றில் 312 செலவின விடயங்களில் 158 செலவின விடயங்களுக்கான மொத்த தேறிய நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே ரூபா 891,237,274 தொகையான முரண்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 4.2.2 நிதி நிலைமை தொடர்பான விசேட சந்தர்ப்பங்கள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் விசேட சந்தர்ப்பங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றன.

| விடயம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | முன்னைய ஆண்டுடனான வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| **நிதிசார் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 3,650,178,880 | 2,360,858,419 | 54.61 |
| மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் | 907,238,026 | 876,987,398 | 3.45 |
| அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான கடன் | 148,616,768 | 164,655,382 | 9.74 |
| மொத்த நிதிச் சொத்துக்கள் | 4,706,033,674 | 3,402,501,199 | 38.31 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 512,122,412 | 609,056,968 | 15.91 |
| கையேற்கப்பட்ட கடன் மீதி | 1,081,161 | 1,081,161 | - |
| | 513,203,573 | 610,138,129 | 15.88 |

| | | | |
|---|---|---|---|
| மொத்த பொறுப்புக்களை விஞ்சிய மொத்த சொத்துக்களின் மீதி | 4,192,830,101 | 2,792,363,070 | 50.15 |
| திரண்ட மாகாண சபைகள் நிதியத்தின் வருட ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி | 2,792,363,071 | 2,747,453,393 | 1.63 |
| ஆண்டின் பாதீட்டு மிகை | 1,400,467,030 | 44,909,677 | 3018.4 |
| வருட இறுதியிலான மீதி | 4,192,830,101 | 2,792,363,070 | 60.89 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறன.

(அ) விவசாய திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,081,161 தொகையான கையேற்கப்பட்ட கடன் மீதி பல வருடங்களாக கணக்குகளில் முன்கொண்டுவர்ப்படும் மீதியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடத்தின் பாதீட்டு மிகை முன்னைய ஆண்டில் ரூபா 44,909,677 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அது ரூபா 1,400,467,030 வரை 3018.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 4.2.3 காசுப்பாய்ச்சல் கூற்றின் விசேட சந்தர்ப்பமொன்று

சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் விசேட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | **விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|---|
| | | ரூபா |
| 1. | செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | 1,328,206,095 |
| 2. | முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | 72,260,935 |
| 3. | நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | (148,728,882) |
| 4. | தேறிய காசுப்பாய்ச்சல் | 1,251,738,148 |
| 5. | வருட ஆரம்பத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 1,281,812,838 |
| 6. | ஆண்டிறுதியில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 2,533,550,985 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காசு மற்றும் காசுக்குச் சமமானவை தயாரிக்கப்பட்ட விதம் காசுப்பாய்ச்சல்கூற்றின் குறிப்பொன்றினூடாக குறிப்பிடப்பட்டிராததுடன், திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றின் பெறுமதி ரூபா 2,533,550,985 ஆக இருந்தது.

(ஆ) தேறிய காசுப்பாய்ச்சல் முன்னைய ஆண்டில் ரூபா 321,388,736 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அது ரூபா 1,251,738,147 ஆனமையால் ரூபா 930,349,411 இனால் அதிகரித்திருந்தது.

**4.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான சம்பவங்கள்**

மாகாண திறைசேரி வைப்புக் கணக்கின் கீழ் நட்டம் மற்றும் இழப்புக்களாக கிரிஉல்ல வலய அலுவலகத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் பதிவழிப்பதற்காக வழங்கிய ரூபா 13,609,655 தொகை மீள அறவிடப்பட்டிராததுடன், இது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மோசடிக்கு மக்கள் வங்கி சட்ட ரீதியாக பொறுப்புக்கூற வேண்டுமென தீர்மானிக்கப்படுமெனின், பொறுப்புக்கூற வேண்டிய வங்கியொன்றாக அந்த நட்டத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2011 யூன் 30 ஆந் திகதி அறிவித்திருந்தது.

**5. அதிகார சபை/ நிதியக் கணக்கு மற்றும் வணிக முற்பணக் கணக்கு**

**5.1 அதிகார சபை/ நிதியக் கணக்கு**

(அ)கணக்காய்வு அபிப்பிராயம்

வடமேல் மாகாண சபையில் தாபிக்கப்பட்டுள்ள 09 அதிகாரசபைகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 05 நிதியங்களில் 04 நிதியங்களுக்காகவும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒரு நிதியத்திற்கு மாத்திரம் முனைப்பழியற்ற அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் ஒவ்வொரு அதிகார சபை/ நிதியத்தின் ஒட்டுமொத்த நிதி விளைவு பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| அதிகாரசபையின் பெயர் | ஒட்டுமொத்த வருமானம் | ஒட்டுமொத்த செலவினம் | தேறிய விளைவு (பற்றாக்குறை)/ மிகை | தேறிய விளைவு ஒட்டுமொத்த வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| இயந்திர உபகரண அதிகாரசபை | 61,399,710 | 103,080,178 | (41,680,468) | (67.88) |
| மாகாண சுற்றாடல் அதிகாரசபை | 21,863,004 | 20,000,600 | 1,862,403 | 8.51 |
| வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை | 17,347,912 | 21,098,569 | (3,750,657) | -(21.6) |
| முன்பள்ளிச் சிறார் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை | 19,620,523 | 25,803,997 | (6,183,474) | (31.5) |
| கைத்தொழில் சேவைப் பணியகம் | 84,253,211 | 81,896,033 | 2,357,178 | 2.79 |
| வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | 93,370,320 | 90,361,124 | 3,009,196 | 3.22 |
| மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை | 159,636,622 | 156,040,893 | 3,595,729 | 2.25 |
| பிரதேச வள அபிவிருத்தி அதிகாரசபை | 6,861,901 | 4,681,455 | 2,180,446 | 31.7 |
| வடமேல் மாகாண ஜனகலா மன்றம் | 43,738,487 | 43,644,603 | 93,884 | 0.21 |

| | | | | |
|---|---|---|---|---|
| முதலமைச்சரின் நிதியம் | 2,000,000 | 4,319,892 | (2,319,892) | -(116) |
| விளையாட்டுத்துறை நிதியம் | 242,928 | 149,116 | 93,512 | 38.49 |
| மாகாண நீர்ப்பாசன நிலைபேறான பேணுகை நிதியம் | 2,362,767 | 959,420 | 1,403,347 | 59.39 |
| வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண அபிவிருத்தி நிதியம் | 3,186,330 | 3,047,140 | 139,190 | 4.36 |
| வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | 65,110,387 | 45,184,231 | 19,926,156 | 30.6 |

**(இ)** **நிதி நிலைமை**

மீளாய்வாண்டின் ஒவ்வொரு அதிகார சபையினதும் நிதி நிலைமை விகித வாரியாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவதானிக்கப்பட்டது.

| **அதிகாரசபையின் பெயர்** | **நடைமுறையல்லா சொத்துக்கள்** | **நடைமுறைச் சொத்துக்கள்** | **நடைமுறை பொறுப்புக்கள்** | **திரண்ட நிதியம்** | **நீண்ட கால கடன்** | **நடைமுறை விகிதம்** |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| இயந்திர உபகரண அதிகாரசபை | 39,069,773 | 45,299,539 | 46,179,076 | 42,451,500 | 14,761,736 | 0.9 |
| மாகாண சுற்றாடல் அதிகாரசபை | 59,637,010 | 12,405,244 | 1,261,641,668 | 57,175,512 | - | - |
| வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை | 48,395,570 | 6,091,528 | 6,165,001 | 13,437,786 | - | 0.9 |
| முன்பள்ளிச் சிறார் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை | 18,148,146 | 10,799,811 | 5,200,130 | (8,675,467) | 3,383,181 | 2.0 |
| கைத்தொழில் சேவைப் பணியகம் | 67,099,508 | 88,439,332 | 22,849,033 | 110,415,387 | 22,274,421 | 3.8 |
| வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | 48,780,019 | 21,433,265 | 43,411,291 | 23,838,445 | - | 0.4 |
| மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை | 21,242,324 | 259,060,381 | 64,020,235 | 216,282,468 | - | 4.0 |
| வடமேல் மாகாண ஜனகலா மன்றம் | 9,074,447 | 22,811,820 | 1,708,685 | 20,388,756 | - | 13.3 |
| பிரதேச வள அபிவிருத்தி அதிகாரசபை | 56,179,038 | 11,320,044 | 7,033,880 | (67,243) | - | 1.6 |
| முதலமைச்சரின் நிதியம் | 5,261,426 | 1,015,023 | 111,000 | 3,223,914 | - | 9.1 |
| விளையாட்டுத்துறை நிதியம் | 259,985,160 | 4,587,037 | 36,106 | 262,054,772 | - | 127.0 |
| மாகாண நீர்ப்பாசன | - | 1,403,347 | - | 1,403,347 | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிலைபேறான பேணுகை நிதியம் | | | | | | |
| வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண அபிவிருத்தி நிதியம் | 9,000,000 | 1,614,082 | 586,000 | 139,190 | - | 2.7 |
| வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம் | 250,411,719 | 11,744,021 | 1,825,383 | 262,165,742 | - | 6.4 |

**(ஈ) கணக்காய்வு அவதானிப்புகள்**

**(i) வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபை**

(ஏ) வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகார சபையின் கடந்த 05 வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 64,476,157 கூட்டுத்தொகையான நட்டமொன்று அவதானிக்கப்பட்டமையால் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று நிலவியது.

(பீ) ரூபா 10,190,290 கூட்டுத்தொகையான கிரயமுடைய 05 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபையில் பல வருடங்களாக சிறு சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாமல் அல்லது சேவைகளுக்கு தேவையான உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளாமையின் காரணத்தால் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(சீ) வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபைக்கு சொந்தமான இயந்திரங்கள் மற்றும் வாகனங்களுக்கு போதியளவான சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டங்களை தயாரிக்காமையின் காரணமாக கிரயம் / (மீள் மதிப்பீட்டுப்) பெறுமதி ரூபா 15,643,685 கொண்ட 06 வாகனங்கள் பல வருடங்களாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**(ii) வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

கடந்த 05 வருடங்களில் வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் மூலதன கணக்கினை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மூலதனம் ரூபா 8,650,103 இனால் குறைவடைந்து காணப்பட்டமையால் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று நிலவியது.

**(iii) சுற்றாடல் அதிகாரசபை**

சுற்றாடல் அதிகாரசபையால் கடன்கொடுத்தோராக ரூபா 5,523,280 காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 04 அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 704,643 தொகை 2016 மார்ச் மாதம் வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) முன்பள்ளிச் சிறார் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

முன்பள்ளிச் சிறார் கல்வி அபிவிருத்தி அதிகாரசபையின் 23 உத்தியோகத்தர்களுக்காக பணிக்கொடையாக 2015 திசெம்பர் 31 ஆந்

திகதியளவில் ரூபா 3,520,630 ஒதுக்கப்பட்டு தனியானதொரு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு பேணப்பட வேண்டுமெனினும், அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை.

**(v) கைத்தொழில் சேவைப் பணியகம்**

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 1,409,254 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(பீ) அட்டுறு ஊழிய சேமலாப நிதியக் கணக்கின் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 349,535 தொகையில் 2015 ஆம் ஆண்டினுள் ரூபா 276,199 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

(சீ) அட்டுறு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியக் கணக்கின் ஆரம்ப மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 125,702 தொகையில் 2015 ஆம் ஆண்டினுள் ரூபா 37,663 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

**(vi) முதலமைச்சரின் நிதியம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான முதலமைச்சரின் நிதியத்தில் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,319,892 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,224,000 ஆனமையால் நிலவும் வருமானத்தை விஞ்சி நோயாளர்களுக்காக உதவு தொகைகள் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 வணிக முற்பணக் கணக்குகள்

### 5.2.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்குரிய பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மூலப்பொருள் வழங்கல் உள்ளடங்கலாக புடவைக் கைத்தொழில் தொழிற்சாலைகளை உருவாக்குதலும் நிர்வகித்தலும் - 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு

(ஆ) மூலப்பொருள் வழங்கல் அடங்கலாக கைத்தொழில் தொழிற்சாலைகளை உருவாக்குதலும் நிர்வகித்தலும் - 2-15 ஆம் ஆண்டு

(இ) கைத்தொழில் பாடசாலைகளை நடாத்திச் செல்லல் - 2015 ஆம் ஆண்டு

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

6.1.1. ஆயர்வேத திணைக்களத்திற்குத் தேவையான மருந்து வகைகளை ஆயர்வேத உற்பத்திக்கூடத்தில் உற்பத்தி செய்வதற்கான இயலுமை உள்ள போது 15 வகையான மருந்துப் பொருட்கள் மருந்தாக்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டினுள் ரூபா 1,519,500 மேலதிக செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

6.1.2. வடமேல் மாகாண கூட்டுறவு திணைக்களத்திற்குரிய குருநாகல், குளியாப்பிட்டிய மற்றும் சிலாபம் ஆகிய உப அலுவலகங்களில் 2015 ஆண்டில் கலைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த சங்கங்களின் எண்ணிக்கை 376 ஆக இருந்ததுடன், கலைப்பவர்களை நியமித்துள்ள சங்கங்களின் எண்ணிக்கை 23 ஆனமையால் 2015 ஆம் ஆண்டில் கலைப்பதற்குள்ள மொத்த சங்கங்களின் எண்ணிக்கை 399 ஆகும். எனினும் இந்த சங்கங்களில் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி கலைப்பதற்கான பணிகள் பூர்த்தி செய்த சங்கங்களின் எண்ணிக்கை 46 ஆகும்.

6.1.3 சிலாபம் மற்றும் குளியாபிட்டிய கூட்டுறவு அபிவிருத்தி உப ஆணையாளரின் அதிகார எல்லையினுள் அமைந்துள்ள பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களில் பெரும்பாலானவை கணக்காய்வினை நிறைவு செய்து அறிக்கைகளை அலுவலகத்திற்கு கையளித்திருந்த போதிலும், அவற்றுள் 76 அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு உரிய கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கும் போது 02 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் 2015 திசெம்பர் மாதமளவில் கணக்காய்வு நிறைவடைந்து 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த குளியாப்பிட்டிய கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 20 அறிக்கைகள் மீளாய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.1.4 மாகாண குறித்துரைக்கப்பட்ட மானியங்களின் கீழ் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 03 சேதனப்பசளை உற்பத்தி சந்தைப்படுத்தல் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,461,899 நிதியேற்பாடு கிடைத்திருந்தது. எனினும், குளியாப்பிட்டிய மற்றும் நிக்கவெரட்டிய பிரதேசங்களில் 02 சந்தைப்படுத்தல் நிலையங்களை மாத்திரம் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன், அந்த நிர்மாண நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

6.1.5. கல்கமுவ ஆதார வைத்தியசாலையின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள போதிலும், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியை இணக்கம் செய்யும் போது 27 பதவிகளுக்குரிய 148 வெற்றிடங்கள் நிலுவுகின்ற காரணத்தால் நவீனமயப்படுத்தலூடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைய முடியாதிருந்தது.

6.1.6 புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு விசர்நாய்க்கடி நோய் தொடர்பில் அறிவூட்டும் 02 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 100,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததெனினும், 2015 ஆம் ஆண்டின் போது அந்த நிதியேற்பாட்டில் 55 சதவீதம் அல்லது ரூபா 54,675 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

## 6.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

6.2.1 சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய, விசேட வைத்திய உதவு தொகைகள் மற்றும் சிறுநீரக உதவு தொகைகளை செலுத்தும் போது 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி நட்டாட்டுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 673 நபர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 582,500 நிபுணத்துவ மருத்துவ உதவிகள் மற்றும் சிறுநீரக உதவு தொகைகள் கணக்காய்வு திகதியான 2015 ஒக்தோபர் 16 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

6.2.2 2015 ஆம் ஆண்டிற்காக புடவைக் கைத்தொழில் கிராமங்களை ஆரம்பிக்கும் விசேட செயற்திட்டத்தின் கீழ் 04 கிராமங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 4.92 மில்லியன் நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒரு புடவைக் கைத்தொழில் கிராமம் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், உத்தேச புடவைக் கைத்தொழில் கிராமங்கள் 04 இற்கு வழங்குவதற்காக ரூபா 990,000 பெறுமதியான நூல் இருப்பொன்று ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மகுள்வெவ புடவைக் கைத்தொழில் கிராமத்திற்காக மாத்திரம் ரூபா 144,403 பெறுமதியான நூல் இருப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

6.2.3 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் கொடவெல சந்தைப்படுத்தல் நிலையத்தில் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட புடவைகளுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவீடுகள் நிலுவவையாக இருந்த கடன் மீதி ரூபா 892,310 ஆக இருந்தது.

6.2.4 2015 ஆம் ஆண்டின் போது கொடவெல நீர் சுத்திகரிப்பு அலகினை ஸ்தாபிப்பதற்காக ரூபா 5,356,000 நிதியேற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அவற்றுள் ரூபா 2,678,000 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிட்டிருந்தது.

6.2.5 2014 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடுகளுடாக கொள்வனவு செய்யப்பட்டு யட்டிவல சுவசக்தி கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 39,000 பெறுமதியான களிமண் குழைக்கும் இயந்திரம் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் மோட்டரொன்று இல்லாமல் பாவனைக்கு எடுக்கப்படாதிருந்தது.

6.2.6 நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக 04 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்ட மதுபான அனுமதிப்பத்திர முத்திரை கட்டணம் ரூபா 140,000 தொகை உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக 03 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 38,600 தொகையான காட்டு யானை சேத நட்டஈட்டு தொகை உரிய தரப்பினருக்கு செலுத்தப்படாமல் 01 ½ வருட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

6.2.7 இலங்கை ரெலிகொம் மத்திய நிலையம் மற்றும் தொலைபேசி நிலைமாற்றல் கோபுரம் அமைந்துள்ள பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய அரசாங்க காணி நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

6.2.8 பன்னல பிரதேச செயலகத்தின் அதிகார எல்லையில் அமைந்துள்ள தனியார் கம்பனியொன்றினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 04 ஏக்கர் 03 ரூட் 37 பேர்ச் பரப்பளவான காணி மற்றும் 01 ரூட் 28 பேர்ச் பரப்பளவான அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டு வரும் காணி போன்றவற்றுக்காக 12 வருடங்களுக்கு அண்மிய காலமாக நீண்டகால குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க வாடகைப்பணம்

அறவிடப்பட்டிருக்கவில்லை. குளியாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் மெதல்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் 20 பேர்ச் பரப்பளவான அரசாங்க காணியொன்றின் சுமார் 13 வருட காலமாக கூட்டுறவு சங்க கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வங்கி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இந்த காணி பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிராமையால் வருடாந்தம் கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் அரசிற்கு இழப்பாகியிருந்தது. அவ்வாறே பன்னல பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குரிய 09 ஏக்கர்கள் 01 ரூட் 8.42 பேர்ச் பரப்பளவான காணி 04 தனியார் நிறுவனங்களுக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதெனினும், அதற்கு முறையான அங்கீகாரமொன்று கிடைக்கப்பெற்றிராமையால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பாரியளவிலான வருமானமொன்று இழப்பாகியிருந்தது.

6.2.9 2015 நவம்பர் 17 ஆந் திகதி ஆயர்வேத திணைக்களத்தின் களஞ்சியம் மற்றும் களஞ்சியப் பேரேட்டின் பௌதீக பரிசோதனையின் போது சீருடைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட காற்சட்டை மற்றும் சட்டை துணிகளில் 11.9 மீட்டர் மிகையொன்றும் புடவைத்துணிகளில் 32.4 மீட்டர் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டது.

6.2.10 குருநாகல் ஆயர்வேத வைத்தியசாலையின் உற்பத்திக்கூடம் தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது ரூபா 354,064 பெறுமதியான 13 மருந்துப் பொருட்கள் உலர் மருந்துப் பொருள் களஞ்சியத்திலும் தலைமைக் களஞ்சியத்திலிருந்து இருப்பாக விநியோகிக்கப்பட்டிருந்த மருந்துப்பொருட்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

6.2.11 குருநாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 04 வாகனங்கள் 2008, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் முதல் இயந்திர சாதனங்கள் அதிகாரசபையில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களை ஏலமிடுவதற்கோ அல்லது கைத்தவிர்ப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்படாமல் துருப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

6.2.12 உரிய செயற்பாடு நிறைவடைந்த பின்னர் 04 சந்தர்ப்பங்களில் எஞ்சிய ரூபா 420,662 தொகை தலைமைச் செயலகத்தினால் திருப்பி அனுப்புவதற்கோ அல்லது அரச வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

6.2.13 பாதீட்டினூடாக கல்வியின் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,450,000 தொகை உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக கு/புனித ஆனா வித்தியாலயத்தின் பகுதி தலைவர்கள் நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் மாகாண கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

6.2.14 மாகாண கல்வி திணைக்களத்திற்கு சொந்தமான 06 வலயங்களுக்குரிய 320 பாடசாலைகளில் தரப்படத்தப்பட்ட அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களுக்குப் பதிலாக குறைந்த தரமொன்றின் உத்தியோகத்தர்கள் கடமையினை நிறைவேற்றியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அவ்வாறே அந்த 06 வலயங்களுக்குரிய 152 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களுக்காக உயர் தரங்களிலுள்ளோர் கடமை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களும் நிலவின. மேலும் 90 பாடசாலைகளில் பிரதி அதிபர்கள் தேவையற்ற பாடசாலைகளில் பிரதி அதிபர்கள் கடமையினை மேற்கொள்கின்றமையையும், பிரதி அதிபர்கள் இருக்க வேண்டிய 66 பாடசாலைகளில் பிரதி அதிபர்கள் சேவை புரிந்திருக்காமையும் வெளிப்படுத்தப்பட்டது.

6.2.15 குளி/ கிதலவ பூகல்ல மகா வித்தியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணி 05 பேராக இருந்ததெனினும், மேற்கொள்ளப்பட்ட பௌதீக

பரிசோதனையின் போது கல்விசாரா பதவியணியில் 08 பேர் சேவையில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்குரிய இரு ஊழியர்கள் பாடசாலைக்கு இணைப்பு செய்யப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சம்பளமாக ரூபா 646,440 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

6.2.16 இப்பாகமுவ வலயத்திற்குரிய பாடசாலைகளில் 48 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றுள் 05 இல்லங்களில் மாத்திரம் உத்தியோகத்தர்கள் குடியிருப்பதுடன், இவற்றுள் பயன்படுத்தக்கூடிய 02 உத்தியோகபூர்வ இல்லங்களும், அகற்றப்பட வேண்டிய 02 உத்தியோகபூர்வ இல்லங்களும் காணப்பட்டன. எஞ்சிய 44 உத்தியோகபூர்வ இல்லங்களும் திருத்தியமைக்கக்கூடிய நிலையில் காணப்பட்டன.

6.2.17 தம்பதெனிய மருத்துவமனைக்குரிய 05 உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியேறிய நாள் முதல் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

6.2.18 காணிகள் ஆணையாளர் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக பதிவேடொன்றும் கோவையொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. மாகாண காணி ஆணையாளரின் மாகாண/காஆ/ஆ1 ஆம் இலக்க 2015 நவம்பர் 17 ஆந் திகதிய கடிதம் மூலம் 25 உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளமையும், அவற்றுள் 17 இல்லங்கள் பாவனைக்குகந்த நிலையிலும் 08 இல்லங்கள் சிதைவடைந்த நிலையிலும் உள்ளமையும் இனங்காணப்பட்டிருந்தது. பாவனைக்குகந்த நிலையிலுள்ள 11 இல்லங்கள் அரச உத்தியோகத்தர்கள், மகளிர் சங்கங்கள் மற்றும் முன்பள்ளிகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், 06 இல்லங்கள் பயன்பாடற்றுக் காணப்பட்டன.

6.2.19 ஆணமடுவ சமூக உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்தில் பாராளுமன்ற அங்கத்தவரொருவரால் கட்சி அலுவலகமொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், 2008 ஆகஸ்ட் 24 ஆந் திகதி அது தீ வைக்கப்பட்டிருந்தது. 2015 மார்ச் 02 ஆந் திகதி புத்தளம் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் சேதமடைந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்குரிய ரூபா 559,355 தொகையான மதிப்பீட்டு அறிக்கையொன்றினை ஆணமடுவ பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் மாதம் வரையிலும் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.2.20 பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ள இலங்கை சுற்றுலாச் சபையின் அங்கீகாரம் பெற்ற ஹோட்டலொன்றிலிருந்து இரு மதுவரி வரி அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருந்தன. எனினும், 2015 பெப்ரவரி 13 ஆந் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் ரூபா 150,000 தொகையான நிலுவை திருத்தக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

6.2.21 பொல்பித்திகம, வாரியபொல, நிக்கவெரட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் மீளாய்வாண்டிற்கான நிலுவை விளைவு வரி ரூபா 509,449 தொகையும், வருடாந்த வரி ரூபா 11,436 தொகையும், நீண்டகால நிலுவை வரியான ரூபா 898,720 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

6.2.22 பொல்பித்திகம, அளவ்வ மற்றும் பண்டுவஸ்நுவர (கிழக்கு) ஆகிய பிரதேச செயலகங்களினால் 2015 ஆம் ஆண்டிற்கான மாகாண முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோர், சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் தன்னார்வ அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,458,216 பெறுமதியான பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

6.2.23 கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குச் சொந்தமான 05 ஏக்கர் 02 ரூட் 17 பேர்ச் அளவான காணியொன்று 1995 யூன் 15 ஆந் திகதி தனியார்

தரப்பினரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் நிலுவை வாடகைத் தொகையான ரூபா 313,179 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.2.24 பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 ரூட் 11 பேர்ச் பரப்பாளவான காணியொன்று தனியார் கம்பனியொன்றுக்கு வடமேல் மாகாண சபையின் பிரதம செயலாளரால் 1992 மார்ச் 24 ஆந் திகதி முதல் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததெனினும், குத்தகையாளரால் 2002 ஆம் ஆண்டு முதல் எதுவித வாடகைத் தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

6.2.25 2015 ஆம் ஆண்டின் போது பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் 03 கருங்கல் அகழும் செயற்திட்டங்களுக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மேலும் 26 செயற்திட்டங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் அனுமதியின்றி நடாத்திச் செல்லப்படுவதாக கணக்காய்வு களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 6.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

6.3.1 விவசாயத் திணைக்களத்தின் சிறு மற்றும் நடுத்தர அளவிலான வடிநிலங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் வடிநிலங்களை நிர்மாணிக்கும் போது மதில்கள் கழுவிச் செல்வதைத் தடுப்பதற்காக புற்களைப் பதித்தல் மற்றும் வடிநிலத்தில் நீரினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரை ஏக்கர் பரப்பளவான காணியில் வர்த்தகப் பயிர்கள் பயிரிடப்பட வேண்டியிருந்தது. அந்தத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாதுள்ள போது வாரியபொல வலயத்தின் நலனாளிகள் இருவருக்கு ரூபா 100,000 தொகையும், இப்பாகமுவ வலயத்தின் 05 நலனாளிகளுக்கு ரூபா 250,000 தொகையும், ஆணமடுவ வலயத்தின் 04 நலனாளிகளுக்கு ரூபா 200,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது.

6.3.2 விவசாய திணைக்களத்தின் மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு வேலிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வேலிகளில் கினிசீரியா மற்றும் செவந்தரா கன்றுகள் நாட்டப்பட வேண்டுமெனினும், அந்தத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாமல் இப்பாகமுவ வலயத்தின் நலனாளியொருவருக்கு ரூபா 30,000 தொகையும், ஆணமடுவ வலயத்தின் இரு நபர்களுக்கு ரூபா 11,000 தொகையும், வாரியபொல வலயத்தின் 5 பேருக்கு ரூபா 33,985 தொகையும் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

6.3.3 விவசாயத் திணைக்களத்தின் பயிர் உற்பத்தி சங்கத்தின் உருவாக்கத்தை பலப்படுத்துதலும் ஒழுங்குபடுத்தலும் செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,200,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2015 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,256,266 நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

6.3.4 வடமேல் மாகாண பொறியியல் திணைக்களத்தினால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட 10 தொழிற்சாலைகளுக்குரிய கோவைகளை பரிசோதனை செய்த போது நிதியேற்பாடு ரூபா 70,094,738 தொகைக்கு ஒப்பாக மேலதிகமாக செய்யப்பட்ட பணிகளின் பெறுமதி ரூபா 28,098,610 ஆனமையால், அது ஒட்டு மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியில் 40 சதவீதமாக இருந்ததுடன், அது கொள்வனவு நடைமுறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

6.3.5 சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றும் போது நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்களை விஞ்சுவதை தடுப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட ரூபா 38,132,879 பெறுமதியான 10 ஒப்பந்தங்கள் பல்வேறு கட்டங்களுக்கு பகிரப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விலைமனு கோரப்பட்டு ஒரே ஒப்பந்ததாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

6.3.6 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பிரதான நோக்கமான பயிற்சி பெறுவோரை பயிற்றுவிக்கும் செயற்பாட்டிற்காக 2013 ஆம் ஆண்டின் போது 195 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு பயிற்சிக் கொடுப்பனவாக ரூபா 7,029,358 செலுத்தப்பட்டிருந்ததெனினும், இந்த மாணவர்கள் பயிற்சி கால எல்லையின் பின்னர் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தில் தக்கவைக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

6.4.1 PE 9966 ஆம் இலக்க குழாம் வாகனம் வாகன விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் அரச விடுமுறை தினங்கள் மற்றும் அவர் தனிப்பட்ட விடுமுறைகளை பெற்றிருந்த நாட்கள் உட்பட 7 சந்தர்ப்பங்களில் 984 km தூரம் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அந்த நாட்களிற்குரிய மேலதிக நேரம், எரிபொருள் போக்குவரத்து செலவினம் என ரூபா 24,423 கூட்டுத்தொகையான செலவினமொன்று ஆளுநர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

6.4.2 2013 திசெம்பர் 23 ஆந் திகதி முதல் 2015 செம்தெம்பர் 09 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஆரம்ப விசாரணை தொடர்பில் ஒழுக்காற்று கட்டளை வழங்குதல் 05 முதல் 25 மாதங்கள் வரை தாமதபபடுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது.

6.4.3 2014 ஆம் ஆண்டில் சபை செயலகத்தினால் சீனா மற்றும் தாய்லாந்து கற்கை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிங்கப்பூர் தாய்லாந்து கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றுக்காக வெளிநாடு சென்ற 25 பேருக்காக விமானம் பயணச்சீட்டுக் கட்டணம், கடவுச்சீட்டுக் கட்டணம், உணவு, குடிபானம், தங்குமிடம் மற்றும் போக்குவரத்து கட்டணம் போன்றவற்றுக்காக ரூபா 4,676,995 தொகையான பணம் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. மீண்டும் அந்த 25 பேருக்கு ரூபா 5,013,100 தொகை பணம் கொடுப்பனவுகளை தீர்ப்பதற்காக 2014 ஒக்தோபர் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

6.4.4 அளவ்வ பிரதேச வைத்தியசாலையின் மருத்துவரொருவர் 2015 யூன் 19 ஆந் திகதி முதல் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கோவையின் பிரகாரம் இந்த உத்தியோகத்தருக்கு 2015 யூன் 24 ஆந் திகதி முதல் 2015 யூலை 02 ஆந் திகதி வரையிலும் வெளிநாட்டு விடுமுறைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரையிலும் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை.

6.4.5 வாரியபொல வைத்தியசாலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பல் வைத்தியர்களின் எண்ணிக்கை 01 ஆக இருந்த போதிலும் இரு பல் வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோதிலும், 2014 திசெம்பர் முதல் 2015 யூலை மாதம் வரையான காலப்பகுதியினுள் 864 மணித்தியாலங்களுக்காக ரூபா 448,797 மேலதிக நேரப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

6.4.6 கல்கமுவ ஆதார வைத்தியசாலையின் நோயாளிகளுக்கான உணவுக்காக 2015 ஆம் ஆண்டின் போது துண்டுகளாக்கப்பட்ட பெரிய மீன் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பாரை, அறுக்குளா, சூரை

போன்ற பெரிய மீன்களுக்காக சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்காக ரூபா 189,287 செலுத்தப்பட்டிருந்தது.

6.4.7 புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 2013 மே மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,050,000 பெறுமதியான 57 – 5608 இலக்கம் கொண்ட நிசான் ரக கெப் வண்டி தீப்பற்றி சேதமடைந்திருந்ததெனினும், கோவையின் படி நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எதுவித பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்காக காப்பீடு மூலம் சேதம் மீளளிப்பொன்று இடம்பெற்றிராததுடன், வாகனம் மாவத்தகம தனியார் கராஜ் ஒன்றிற்கு பழுதுபார்த்தலுக்கு கையளிக்கப்பட்டு 2 வருடங்களுக்கு அண்மிய காலம் கடந்திருந்த போதிலும், பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு வாகனம் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

6.4.8 குருநாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 42 – 0632 இலக்கம் கொண்ட நோயாளர் காவும் வண்டி (Ambulance) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 148,580 மதிப்பிடப்பட்ட தொகைக்கு பழுதுபார்த்தலுக்காக இயந்திர உபகரண அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் மேற்கொள்ளும் போது, இயந்திர உபகரண அதிகாரசபையால் ரூபா 234,220 தொகையான மேலதிக மதிப்பீடொன்றை சமர்ப்பிப்பதற்கும், அதற்குரிய அங்கீகாரத்தினை வழங்க முடியாமையின் காரணத்தினாலும் 04 வருட காலமாக அந்த வாகனம் இயந்திர உபகரண அதிகாரசபையில் தரித்து வைக்கப்பட்டுள்ளமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

## 6.5 வெளிப்படையான மோசடிகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வீதிகள் அமைச்சிற்கு வழங்கப்பட்ட 65 – 2571 இலக்கம் கொண்ட ஜீப் வண்டிக்கு 2014 திசெம்பர் மாதத்தில் வேறொரு இயந்திரமொன்று (Engine) அங்கீகாரமின்றி பொருத்தப்பட்டிருந்தது. வாகனத்தின் இயலளவுக்கு பொருந்தாத இயந்திரமொன்றை பொருத்திய காரணத்தால் மீளாய்வாண்டினுள் ரூபா 8.50,189 தொகையான பணம் பழுதுபார்த்தலுக்காக செலவிட நேர்ந்திருந்தது.

## 6.6 விளைவற்ற அல்லது குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

6.6.1 07 மாகாண வைத்தியசாலைகள் சுகாதார திணைக்களத்திற்குரிய 04 அலுவலகங்களின் வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பாரிய தொகையொன்று 01 முதல் 15 வருடங்கள் வரையான காலம் விளைவற்றுக் காணப்படுவதாக கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது.

6.6.2 கல்வி அமைச்சினால் ரூபா 518 இலட்சம் செலவிடப்பட்டு 2012 நவம்பர் 18 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டிருந்த யாகரவத்த ஆசிரியர் நிலையத்தில் பெருமளவிலான குறைபாடுகள் காணப்பட்டமையால், நிர்மாணிக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த நிறுவனங்கள் செயற்பாடற்றிருந்தமையை கணக்காய்வின் போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

6.6.3 மஹகும்புக்கடவல வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு ரூபா 30,827,939 செலவிடப்பட்டு 2011 – 2015 ஆம் ஆண்டுகளில் 05 கட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததெனினும், 2016 மே 26 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 2,785,278 செலவிடப்பட்டு 2013 ஆம் ஆண்டில்

நிர்மாணிக்கப்பட்ட ஆணமடுவ வைத்தியசாலையின் கர்ப்பிணித்தாய்மாரின் சிகிச்சை நிலையங்களும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6.6.4 ரூபா 2,293,358 செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆணமடுவ வைத்தியசாலையின் முதியோரைப் பராமரிப்பதற்கான கட்டிடம் பிரதேச பொறியிலாளரால் கையளிக்கப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6.6.5 கிரிமிட்டியான மட்பாண்டக் கைத்தொழில் பயிற்சி நிலையத்திற்கு 2014 திசெம்பர் மாதத்தில் கிடைத்திருந்த 03 இயந்திரங்கள் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

6.6.6 குளியாப்பிட்டிய மற்றும் மஹவ நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய ஜீப் வண்டிகள் இரண்டு பாவனைக்கு எடுக்கப்படாமல் நீண்டகாலமாக தரித்து வைக்கப்பட்டிருந்தது.

6.6.7 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 528,550 தொகைப் பணம் செலவிட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்த உதாரகம மட்பாண்ட நிலையத்தின் மின்சார அடுப்பானது 2015 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

6.7.1 மாகாண வீதிகள் அமைச்சு 2014 ஆம் ஆண்டின் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி செயற்திட்ட முன்மொழிவின் கீழ் மின்வலு பாதுகாப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களில் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 1,129,600 பெறுமதியான 4000 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றுள் 2859 மின்குமிழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய இருப்பில் ரூபா 181,018 தொகையான 641 மின்குமிழ்களின் பற்றாக்குறையொன்று நிலவியமை பௌதீக பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது.

6.7.2 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 321,505 நிதிப் பற்றாக்குறையொன்றும் ரூபா 830,707 தொகையான புடவைகளின் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.7.3 2015 மே மாதம் சபையிலிருந்து விலகியிருந்த உறுப்பினரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 321,500 தொகையான கடன் முற்பணத் தொகை கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் சபைச் செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

6.7.4 2014 ஆம் ஆண்டில் ஜப்பானில் நடைபெற்ற இலங்கை சம்மேளத்திற்கு பங்கேற்பதற்கு வெளிநாடு சென்ற 07 உறுப்பினர்களுக்காக விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக கூறு விலைகள் சமர்ப்பிக்கப்படாமல் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்தமையால் மாகாண சபைக்கு ரூபா 283,500 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

6.7.5 கிரிமெட்டியான மட்பாண்டக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையின் பிரதேச விற்பனையில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 11,446 தொகைப் பணம் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி பௌதீக பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படாததுடன், ரூபா 37,035

தொகை பணம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டமையை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

6.7.6 குருநாகல் கூட்டுறவு உப ஆணையாளர் அலுவலகத்தில் 2000 சனவரி 01 ஆந் திகதி முதல் 2005 சனவரி 31 ஆந் திகதி வரையான கால எல்லையினுள் இடம்பெற்றுள்ள ரூபா 380,854 தொகையான நிதி மோசடி தொடர்பில் உத்தியோகத்தர் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

6.7.7 மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய 06 வைத்தியசாலைகள் மற்றும் குருநாகல் மாவட்டத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் 413 மருந்து வகைகளில் ரூபா 16,945,704 பெறுமதியான 10,162,768 அலகுகளும், பெறுமதி கணிப்பிட முடியாத மேலும் 53 மருந்துப் பொருட்களும், காலாவதியாதல், மாதிரிகள் பொருந்தாமை, நிறம் மற்றும் மணம் மாற்றமடைதல் போன்ற விடயங்களால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

## 6.8 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

6.8.1 கல்கமுவ மருத்துவமனையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்தவாறு காணப்பட்டதெனினும், மருத்துவமனைக்கு நீர் விநியோகத்தினை பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கலொன்று நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

6.8.2 வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் குருநாகல் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினூடாக நடப்பாண்டினுள் வடமேல் மாகாண சபைக்கு உரித்தற்ற 05 வீதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 13,071,297 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 4,631,844 செலவில் மேம்படுத்தப்பட்ட தெல்விட்ட - பம்பரகந்த வீதியின் மண் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட Field Density பரிசோதனை தோல்வியடைந்திருந்ததெனினும், அந்த வீதிக்காக மேற்குறிப்பிடப்பட்ட முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

6.8.3 04 நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களால் 2015 ஆம் ஆண்டு வீதிப் பராமரிப்புக்காக ரூபா 142,123,798 பெறுமதியான மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், தரப் பரிசோதனை அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6.8.4 2015 நவம்பர் 30 ஆந் திகதி காணப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பரிசோதனையின் போது 404 கைத்தொழில்கள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், 395 கைத்தொழில்களுக்கு மாத்திரமே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 369 கைத்தொழில்களுக்காக ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் 224 கைத்தொழில்கள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

6.8.5 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்த ரூபா 3,967,355 பெறுமதியான 07 கைத்தொழில்கள் ஒப்பந்தக் காலத்தினை விஞ்சியுள்ள போதிலும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன், நிர்மாணக் காலம் நிறைவடைந்துள்ள போதிலும் 75 சதவீதத்திற்கும் குறைவான பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை 56 ஆகும்.

6.8.6 மீகலேவ அமில செவன சிறுவர் இல்லத்தினை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 40,130 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6.8.7 நீர்ப்பாசன திணைக்களம் மீளாய்வாண்டிற்காக சிறு நீர்ப்பாசன புனரமைப்பிற்காக மாகாண குறித்துரைக்கப்பட்ட மானியத்தின் கீழ் 76 கைத்தொழில்களுக்கு ரூபா 28,054,265 தொகையான நிதியேற்பாட்டினை ஒதுக்கியிருந்தது. பிங்கிரிய, ஆரச்சிகட்டுவ மற்றும் ஆணமடுவ பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 7,906,140 பெறுமதியான 05 கைத்தொழில்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது நிறைவேற்றப்படாத பணிகளின் பெறுமதி ரூபா 992,293 என அவதானிக்கப்பட்டது.

## 6.9 தாமதமாகிய செயற்திட்டங்கள்

6.9.1 மாதம்பே ஆயர்வேத மருத்துவமனைக்குரிய காணியினுள் மருத்துவமனைக்காக உத்தியோகபூர்வ இல்லமொன்றினை நிர்மாணித்தல் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

6.9.2 நாரம்மல மாவட்ட மருத்துவமனையின் கழிவுநீர் கட்டமைப்பின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டின்போது 2,604,337 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக 02 மோட்டர்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்காக ரூபா 79,252 தொகை பணமும் செலவிடப்பட்டிருந்தது. இந்தக் கட்டமைப்பு சுமார் 03 வருட காலமாக செயலிழந்துள்ளமையால் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையும் விளைவற்ற செலவினமென அவதானிக்கப்பட்டது.

## 6.10 முறையான பிரகாரம் கையேற்கப்படாத ஆதனங்கள்

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

6.10.1 மாகாண ஆயர்வேத திணைக்களத்திற்குரிய 04 ஆயர்வேத மருத்துவமனைகள் மற்றும் 21 ஆயர்வேத மத்திய மருந்தகங்கள் அமைந்துள்ள காணிகளை 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆயர்வேத திணைக்களத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் நிறைவடையாதிருந்ததுடன், அதன் காரணமாக மருத்துவமனைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அது தடையொன்றாகியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

6.10.2 தம்பதெனிய ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள காணி 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கையேற்கப்படாதிருந்ததுடன், அந்த நடவடிக்கைகள் தாமதமடைந்தமையால் அதன் பகுதியொன்று அத்துமீறிய குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது.

6.10.3 பொல்கஹவெல மருத்துவமனை அமைந்துள்ள காணி 2015 ஆம் ஆண்டு வரையிலும் வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கையேற்கப்படாதிருந்ததுடன், காணியின் ஒரு பகுதி அனுமதியின்றி பாவனைக்குட்படுத்தப்பட்டிருந்தது.

6.10.4 பொல்கஹவெல சுகாதார மருத்துவ உத்தியேகத்தர் அலுவலகம் மற்றும் வாரியபொல பிரதேச மருத்துவமனை ஆகியன அமைந்துள்ள காணிகள் என்பன 2015 ஆம் ஆண்டு வரையிலும் மகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.11 பதவியணியினர் நிர்வாகம்

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

### (அ) அமைச்சு, திணைக்களம் மற்றும் வலய அலுவலகப் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1559 | 1432 | 127 | - |
| மூன்றாம் நிலை | 551 | 380 | 171 | - |
| இரண்டாம் நிலை | 9488 | 7801 | 1687 | - |
| ஆரம்ப நிலை | 4525 | 4069 | 456 | - |
| ஏனையவை | - | 14 | - | 14 |
| மொத்தம் | 16123 | 13,696 | 2441 | 14 |

### (ஆ) பாடசாலைப் பதவியணியினர் (வலய அலுவலகங்கள் நீங்கலாக)

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அதிபர்கள் | 1915 | 1062 | 853 |
| ஆசிரியர்கள் | 26380 | 22840 | 3540 |
| சிற்றூழியர் | 2563 | 2441 | 122 |
| ஏனையவை | 638 | 391 | 247 |
| மொத்தம் | 31496 | 26734 | 4762 |

### (இ) மருத்துவமனை பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அலுவலக பதவியணியினர் | 777 | 620 | 157 | - |
| மருத்துவமனை பதவியணியினர் | 7981 | 6783 | 1478 | 280 |
| மொத்தம் | 8758 | 7403 | 1635 | 280 |

**(ஈ) அமைச்சரவை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|
| பிரத்தியேக செயலாளர்கள் | 06 | 06 | - |
| ஒருங்கிணைப்புச் செயலாளர்கள் | 08 | 08 | - |
| ஊடகச் செயலாளர்கள் | 02 | 02 | - |
| பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்கள் | 06 | 06 | - |
| பிரத்தியேக உதவியாளர்கள் | 06 | 06 | - |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 18 | 18 | - |
| அலுவலக உதவியாளர்கள் | 12 | 13 | 01 |
| ஏனையவை (சாரதிகள்) | 12 | 12 | - |
| மொத்தம் | 70 | 71 | 01 |

* இதற்கு மேலதிகமாக மாகாண சபை அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாகத்திற்குரிய 183 பேரை கொண்ட நாட்கூலி பதவியணியும் காணப்பட்டது.

**(உ) உள்ளூராட்சிப் பதவியணியினர் (மாகாண சபை)**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 29 | 19 | 10 | - |
| மூன்றாம் நிலை | 46 | 21 | 25 | - |
| இரண்டாம் நிலை | 1229 | 949 | 280 | - |
| ஆரம்ப நிலை | 2563 | 3229 | - | 666 |
| ஏனையவை | - | 219 | - | 219 |
| மொத்தம் | 3867 | 4437 | 315 | 885 |

**(ஊ) நியதிச்சட்ட நிறுவனப் பதவியணியினர் (மாகாண சபை)**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 35 | 21 | 14 | - |
| மூன்றாம் நிலை | 83 | 20 | 63 | - |
| இரண்டாம் நிலை | 194 | 195 | - | 01 |
| ஆரம்ப நிலை | 267 | 243 | 24 | - |
| ஏனையவை | - | 39 | - | 39 |
| மொத்தம் | 579 | 518 | 101 | 40 |

**6.11.1 மாகாண சபையினது கல்வி மற்றும் சுகாதாரம் நீங்கலாக ஏனைய நிறுவனங்களது பதவியணியினர் தொடர்பான அவதானிப்புக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உப ஆணையாளர் அலுவலகத்திற்காக குறித்துரைக்கப்பட்டதொரு பதவியணி அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண வீதிகள் அமைச்சரின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக அலுவலக உதவியாளரொருவரை இணைத்துக் கொண்டமையால் 2015 சனவரி முதல் ஆகஸ்ட் வரை ரூபா 313,191 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மிகையொன்று காணப்பட்டதுடன், 04 பிரதி கல்வி பணிப்பாளர் பதவிகளும், 01 தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியும், ஏனைய 48 பதவி வெற்றிடங்களும் நிலவியமையால் உரிய கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாதிருந்தது.

**6.11.2 பாடசாலை பதவியணியினர்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)புத்தளம் வலயத்தின் 200 பாடசாலைகளில் 1663 ஏனைய பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) புத்தளம் வலய அலுவலகத்தில் 1066 சிங்கள மொழிமூல ஆசிரியர்களும், 774 தமிழ் மொழிமூல ஆசிரியர்களுமாக மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 1840 ஆகும்.

(இ) இப்பாகமுவ வலய அலுவலகம் மற்றும் பாடசாலைகளில் 25 பதவி வகைகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 3198 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 2679 ஆகும். அதன் பிரகாரம் 15 வகையான பதவிகளின் ஊழிய பற்றாக்குறை 618 ஆக இருந்ததுடன், பதவியொன்றில் மிகையொன்று அவதானிக்கப்பட்டது.

**6.11.2 சுகாதாரப் பிரிவின் பதவியணியினர்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ)2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சிரேஸ்ட நிலை, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளுக்குரிய முறையே 46, 53, 828 மற்றும் 708 ஆக 1,635 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) மாகாண ஆயர்வேத திணைக்களத்திற்குரிய 05 ஆயர்வேத மத்திய மருந்தகங்களின் மருந்து கலப்பவர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், மாதம்பை ஆயர்வேத மருத்துவமனையின் தாதி உத்தியோகத்தர், ஆயர்வேத உத்தியோகத்தர் (விசேட நிபுணர்), பைசஜ்ஜக, முகாமைத்துவ உதவியாளர், இயன்முறையாளர் (Massager), நோயாளரின் உதவியாளர் மற்றும் காவலாளர் போன்ற பதவிகளில் 19 வெற்றிடங்கள் நிலவின.

(இ) ஆயர்வேத திணைக்களத்தின் சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களில் அறுபது பேருக்கான வெற்றிடங்கள் நிலவின.

## 6.12 வங்கிக் கணக்கிணக்கம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வடமேல் மாகாணத்தின் 04 திணைக்களங்களின் 05 கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வழங்கி 6 மாதங்களை விஞ்சிய காசோலைகளின் பெறுமதி ரூபா 972,841 ஆக இருந்ததுடன், அவை தொடர்பில் மாகாண நிதி விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கல்வித் திணைக்களத்தினதும் மாகாண வருமானத் திணைக்களத்தினதும் 02 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 39,427 தொகையான இனங்காணப்படாத வரவு மற்றும் 03 திணைக்களங்களின் 03 கணக்குகளுக்குரிய ரூபா 169,936 தொகையான இனங்காணப்படாத செலவு மீதியும் காணப்பட்டதுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வங்கிக் கணக்கொன்றின் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத வைப்புக்களின் பெறுமதி ரூபா 11,425 ஆக இருந்ததுடன், மேலுமொரு வங்கிக் கணக்கில் 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான காசுப்புத்தகத்தின் பதிவு செய்யப்படாத வைப்புக்களின் பெறுமதி ரூபா 2,154,008 தொகையும் நிலவின. அந்த மீதிகளைத் தீர்ப்பதற்கு 2016 மே மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் இரண்டு வங்கி நடைமுறை கணக்குகளுக்குரிய 2015 திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கத்தின் பிரகாரம் ரூபா 155,196 கூட்டுத்தொகையான தேறாத 21 வைப்புக்கள் தொடர்பில் மாகாண நிதி விதி 270 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 7.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டில் 267 நிறுவனங்கள் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 121 இன் பதிலளித்தல் 37 முதல் 260 நாட்கள் வரையான கால வீச்சுடைய தாமதமேற்பட்டிருந்ததுடன், 105 நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் பதில்கள் கிடைத்திருக்கவில்லை.

## 7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

(அ) சுகாதார சுதேச வைத்திய சமூக நலனோம்பல், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகார மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான அமைச்சு, மாகாண சுகாதார சேவை, மாகாண ஆயர்வேத, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி போன்ற திணைக்களங்களால் 2015 ஆம் ஆண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) விவசாய அமைச்சு, விவசாய, விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரம், காணி ஆணையாளர் போன்ற திணைக்களங்களால் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.3 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் நிறுவனங்களால் கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- சுகாதார சுதேச வைத்தழிய சமூக நலனோம்பல், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் விவகார மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான அமைச்சு
- மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்
- மாகாண ஆயர்வேத திணைக்களம்
- மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

## 7.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு தொடர்பான ஒட்டுமொத்த நிலமை கீழே தரப்பட்டுள்ளது.

(i) 2015 ஆம் ஆண்டின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கான ரூபா 31,102,338,585 தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 1,703,045,867 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி மீள மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) அமைச்சுக்கள் மற்றும் 22 திணைக்களங்களால் 02 குறைநிரப்பு மதிப்பீடுகளுடாக ரூபா 4,806,973,585 தொகைப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) முற்பணக் கணக்கு எல்லைகள்

| | **செலவினத்தின் உச்ச எல்லை** | **உள்ளபடியான எல்லை** | **வீச்சு** | **பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியான எல்லை** | **வீச்சு** | **வரவு மீதியின் உச்ச எல்லை** | **உள்ளபடியான எல்லை** | **வீச்சு** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளுநர் அலுவலகம் | - | - | - | 800,000 | 2,068,203 | 1,268,203 | 6,5000,000 | 2,872,942 | 3,627,058 |
| நன்நடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் | 5,000,000 | 3,766,485 | 1,233,515 | 1,600,000 | 3,950,884 | 2,350,884 | 20,000,000 | 10,003,745 | 9,996,255 |
| சிறு கைத்தொழில்கள் திணைக்களம் | 9,000,000 | 4,452,595 | 4,574,405 | - | - | - | 20,000,000 | 10,253,034 | 9,746,965 |
| மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு | 2,500,000 | 1,784,081 | 715,919 | 600,000 | 1,625,686 | 1,025,686 | 9,000,000 | 5,302,634 | 3,697,366 |
| கல்வி அமைச்சு | - | - | - | 4,500,000 | 17,033,738 | 12,533,738 | 26,000,000 | 19,552,323 | 6,447,677 |
| வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் | - | - | - | 2,000,000 | 7,465,102 | 5,465,102 | 2,500,000 | 15,252,706 | 12,752,706 |

## 7.5 சூழல்சார் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்

மாகாண ஆயர்வேத திணைக்களம், ஆயர்வேத மருத்துவமனை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களில் அமைந்துள்ள மலசலக்கூட கட்டமைப்பினூடாக வெளியேற்றப்படும் கழிவு நீர் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றமையின் காரணமாக அந்தப் பிரதேசத்தில் துர்நாற்றமொன்று பரவி உள்ளதாகவும், அதனூடாக மருத்துவமனையின வாட்டுத் தொகுதிகளில் உள்ள மற்றும் சிகிச்சை பெறுவதற்கு வருகைத்தரும் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக மாகாண சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை | முறைமையிலான குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடும் வருமான சேகரிப்பும் | (i) வருமானம் மற்றும் நிலுவை வருமானங்களின் கணக்கீடு<br>(ii) நிலுவை வருமானங்களை அறிக்கையிடல்<br>(iii) செலவினப் பேரேட்டுக் கட்டுப்பாடு |
| (ஆ) சொத்துக்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவம் | (i) நடைமுறையல்லா சொத்துக்களின் கணக்கீடு<br>(ii) வருடாந்த சொத்து மெய்மையாய்வினை மேற்கொள்ளல்<br>(iii) ஊழியர் நிர்வாகம்<br>(iv) ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை இணைத்துக்கொள்ளல் |
| (இ) ஒப்பந்தங்களை நிறைவேற்றலும் செலுத்துதலும் | (i) ஒப்பந்த நிர்வாகம்<br>(ii) அனைத்து கொள்வனவு நடவடிக்கைகளையும் கொள்வனவு நடைமுறைக்கமைய நிறைவேற்றுதல்<br>(iii) கொள்வனவு நடைமுறையொன்றில்லாமல் திருத்தப்பட்ட ஒப்பந்தங்களை வழங்குதல்<br>(iv) கட்டங்கள் முறையில் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் |

| | |
|---|---|
| (ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் | (i) செயற்திட்ட முகாமைத்துவம்<br>(ii) செயற்திட்டங்களின் உரிய முறையிலான திட்டமிடல்<br>(iii) பூர்த்தியடைந்ததும் உடனடியாக நடைமுறைப்படுத்தல்<br>(iv) தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை |
| (உ) நியதிச் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் நிர்வாகம் | (i) கூட்டிணைந்த திட்டம் உள்ளடங்கலான நிறுவன திட்டத்தினை தயாரித்தல்<br>(ii) மாகாண திறைசேரியின் கட்டுப்பாடு<br>(iii) மூலதன முகாமைத்தும் |
| (ஊ) வாகனங்களின் பயன்பாடு | (i) வாகனங்களின் கட்டுப்பாடு<br>(ii) பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்<br>(iii) சேதங்களை பதிவு செய்தல் மற்றும் சேதங்கள் தொடர்பில் பரிசோதனை செய்தல்<br>(iv) நட்டங்களை உறுதிப்படுத்தல் மற்றும் அறவிடல் |